

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து** : பொருளாதார விவகாரங்களில் பொறுப்புள்ளவர்களுக்காக: பொருளாதார நிபுணர்கள் எந்தவொரு ஒதுக்கும் பொருளாதாரத்தை நிராகரிக்க துணிவு பெற்றிருக்கவும், புதிய பாதைகளை திறக்க தெரிந்திருக்கவும் வேண்டுமென்று

**ஏப்ரல் மாத கரு** : கிறிஸ்துவிற்குள் மீட்கப்பட்டோம்

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஏப் 29 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | உயிர்ப்பின் 5ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | உயிர்ப்பின் 5ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் சிற்றாலயம்: கொடியேற்றம் |
| ஏப் 30 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் வாரநாள் |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 2 |
| மே 1 செவ் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித யோசேப்பு |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 3 - குணமளிப்பு திருப்பலி |
| மே 2 புதன் | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 4 |
| மே 3 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | புனிதர்கள் பிலிப்பு & ஜேம்ஸ் |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 5 |
| மே 4 வெள் | காலை 6.30 | திருப்பலி (த) | உயிர்ப்பின் வாரநாள் |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 6 - தேவநற்கருணை ஆராதனை |
| மே 5 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | உயிர்ப்பின் வாரநாள் |
| | மாலை 4.00 | திருமணம் (ஆ) | ஜெரால்டு ஸ்டீபன் ஜோசப் & நான்சி மரியா வில்லியம் ஐசக் |
| | மாலை 6.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் 7 - பவனி |
| மே 6 ஞா | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | உயிர்ப்பின் 6ஆம் ஞாயிறு |
| | காலை 10.00 | நவநாள்/ திருப்பலி (த) | புனித செபஸ்தியார் சிற்றாலய திருவிழா |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| ஏப் 29 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு (த) |
| | மதியம் 12.15 | பெர். மை 2-2 | மறைக்கல்வி ஆசிரியர்கள் கூட்டம் |
| மே 1 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| | காலை 9.00 | பெர். மை 2-1 | பயனளிக்கும் மேடைப்பேச்சும், அதனைப் படைக்கும் திறன்களும் |
| | காலை 9.00 | பெர். மை 1-1 | நற்கருணை பணியாளர்கள் ஒடுக்கம் |
| மே 3 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் & வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA பயிற்றுனர்கள் கூட்டம் |
| மே 6 ஞா | மாலை 5.30 | பெர். மை 1-1 | RCIA வேட்பாளர்கள் - ஒன்றுகூடுதல் |

6 மே 2018 மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 13 மே 2018 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும்.

**2018 மே மாத திருமணங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| மே 12 | மாலை | 4.30 | திருமணம் (த) | ஷெனன் ராஜ் த/பெ டேனியல் தனுவார் & எஞ்சலீனா த/பெ சின்னப்பன் |
| மே 18 | மாலை | 4.30 | சடங்கு (த) | சிவா லிங்கம் த/பெ ராமசந்திரன் & செலினா ஏன் த/பெ S. மோசஸ் |
| மே 26 | மதியம் | 2.00 | திருமணம் (ஆ) | அலெக்ஸ் த/பெ ஆரோக்கியசாமி & நான்சி பெர்னிஸ் த/பெ சந்தனசாமி |
| மே 26 | மாலை | 4.30 | திருமணம் (ஆ) | பிடலிஸ் மோசஸ் ஹோசே & மெத்தில்டா ஹோ ஃபுங் என் |

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் தேவை:** கல்வியில் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு கூடுதல் வகுப்புகளை ஏற்பாடு செய்ய பங்கு திட்டமிட்டுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும்.

**2. நேர்மையுடன் வாக்களிக்கவும்:** வாக்களிப்பது நமது கடமையாகும். தயவு செய்து பகுத்தறிந்து உங்களது சரியான வாக்களிப்பை செய்யவும்.

**3. ஆலயம் கட்சி கூடம் அல்ல:** ஆலய வளாகத்திற்குள் பிரச்சாரம் செய்வதும், அல்லது எந்த அரசியல் உபகரணங்களையும் விநியோகம் செய்வதும் அனுமதிக்கப்படாது.

**4. விவிலிய அறிவு (SPM) ஆசிரியர்களுக்கான உருவாக்கம்: 11, 12, & 13 மே 2018 (வெள் ~ ஞாயிறு)** @ பெர். மை. உணவு வழங்கப்படும்.

**5. PDYD4 - க்காக வாகனம் கழுவுதல்: நாள்**: 13 மே 2018 (ஞாயிறு) **நேரம்**: காலை 7.00 ~ மதியம் 12.00 வரை. **இடம்**: பங்கு வளாகம். கூப்பன்கள் திருப்பலிகளுக்கு பிறகு விற்கப்படும். கிடைக்கக்கூடிய பணம் PDYD4 க்கு செல்லக்கூடிய மாணவர்களுக்கு உதவியாக இருக்கும்.

**6. கண்கவரும் இரவு 2018: கருத்து:** ஈப்போ, புலூமா திருமணமான தம்பதிகளுக்கு கண்கவரும் இரவு 2018 **இடம்**: Heritage Hotel (4* விடுதி) - Cameron Highland. **பதிவு**: 11/8/18 (சனி) **வெளியேறும் நேரம்**: 12/8/18 (ஞாயிறு) **கட்டணம்:** ரிம 350/- ஒரு தம்பதிக்கு (போக்குவரத்து, 4* விடுதி & 4 உணவு உள்பட) **சிறப்பம்சங்கள்**: திருமண வாக்குறுதியை புதுப்பித்தல் & காதல் காவியம் சார்ந்த மெழுகுவர்த்தி ஒளியுடன் கூடிய இரவு உணவு. புலூமாதே குடும்ப வாழ்வு பணிக்குழு தம்பதிகளுக்காக ஏற்பாடு செய்யப்படும் முதல் சுற்றுலா. **தொடர்புக்கு**: தோமஸ் சாந்த குமார் (016-5260218)/ கானமுத்து (016-5608827). பதிவுகள் 29/4/18 ~ 27/5/18 வரை ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு நடைபெறும்/ பங்கு அலுவலகத்திலும் பதிவு செய்யலாம்.

**7. பங்கு சந்தா**: ஆலயத்திற்கும், கடவுளின் தூதுரைப் பணிக்கும், பங்கு பராமரிப்புக்காவும் அர்ப்பணிக்க குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டும் என்பதை நாம் அறிவோம். பழைய ஏற்பாட்டில் பத்திலொரு பாகம் செலுத்துவது பற்றி நாம் கேட்டிருக்கிறோம். இது நன்றாகவே தெரியும்!!!! இந்த பங்கில், 2017ல் 1281 சந்தாதாரர்களில் 705 சந்தாதாரர்கள் மட்டுமே செலுத்தியுள்ளனர்- 55.04% மட்டுமே. நாங்கள் 10 விழுக்காடு கேட்கவில்லை! வேலை செய்யும் ஒவ்வொருவரும் ஒரு மாதத்திற்கு ரிம 10/- ஐ கேட்கிறோம். ஒரு McD Big Mac விலைக்கு கூட தேறாது! இதைப்பற்றி சிந்தியுங்கள்.

**8. சான்றிதழ் ஒப்படைப்பு:** பாஸ்கா திருவிழிப்பின் போது (31/3/18) திருமுழுக்கு, புதுநன்மை & உறுதிபூசுதல்- அருட்சாதனங்களை பெற்ற அனைத்து முதியோர் திருமுழுக்கு வேட்பாளர்களுக்கு 6 மே 2018 (ஞாயிறு) மாலை 5.30க்கு பெர். மை 1-1ல் சான்றிதழ் வழங்கப்படும். தேநீர் வழங்கப்படும் தொடர்ந்து உங்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதலும், நமது பங்கு தந்தை அவர்களால் சான்றிதழும் வழங்கப்படும்.

**9. வடக்கு திசை அதிச-வின் காலை சிற்றுண்டி:** வடக்கு திசை அதிச 29 ஏப் 2018 (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். கிடைக்கக்கூடிய பணம் அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மதிய உணவு பொட்டலங்களாகவும் விற்கப்படும். தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள்.

**10. திருத்தொண்டர்கள் லூயிஸ் லோ, ஜேம்ஸ் பிச்சை & லியோ எலியஸ் குருவானவர்களாக திருநிலைப்படுத்தப்படுதல் நேரலை: 29 மே 2018 (செவ்),** புக்கிட் மெர்தாஜாம், புனித அன்னம்மாள் ஆலயத்தில் காலை 10.00க்கு நேரலை செய்யப்படும். பினாங்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் கொண்டாட்டத்தை இணையத்தில் http://www.youtube.com/user/liveonlinepenang வழி காணலாம்.

**11. பயனளிக்கும் மேடைப்பேச்சும், அதனைப் படைக்கும் திறன்களும்**: திட்டத்தின் இரண்டாம் பகுதி 1/5/18 (காலை 9.00- மதியம்1.00 வரை) நடைபெறும். இந்த அமர்வு முதல் பகுதியில் கலந்துக்கொண்ட எல்லா பங்கு கற்பிக்கும் குழு உறுப்பினர்களுக்கும் கட்டாயமானது. உங்கள் பெயரை பங்கு அலுவலகத்திலோ/ புலனம் வாயிலாக ரமேஸ் (016-5662866) அவர்களுடனும் பதிவு செய்யலாம்.

**12. புனித கிரகோரி பாடல்குழு (த):** புனித கிரகோரி பாடல்குழு தமிழ் திருப்பலிகளில் ஆண்டவருக்கு பணி செய்ய திறமையாக பாடுபவர்களையும் இசை கருவிகளை (Organ, Tabla, Triple Bongo) வாசிப்பவர்களையும் வரவேற்கிறது. தயவு செய்து உங்களது பெயர்களை திருத்தொண்டர் சந்தனசாமி அல்லது பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யலாம்.

**13. பங்கின் உத்தரவு: மறைக்கல்வி வகுப்புகள்**: புது நன்மை எடுத்த பிறகு அனைத்து குழந்தைகளும் பின்வரும் பணிக்குழுக்களில் ஏதேனும் ஒன்றை கண்டிப்பாக தேர்ந்தெடுக்க வேண்டும். அ) **பீடச்சிறுவர்கள்** (சிறுவர்கள்/ சிறுமியர்கள்) ஆ) **ஆங்கில பாடல்குழு** இ) **தமிழ் பாடல்குழு**. இது கட்டாயமானதாகும்.

**14. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆங்கிலம்):** 19 மே 2018 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**15. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி மார்ச் 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **386,412.82** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **394,532.39** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**22/04/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,182.60 **காலை 9.00** - RM 1,109.20 **காலை 11.00** - RM 122.00
**ஜெலாப்பாங்** - RM 216.90 **மொத்தம்** - RM 2,630.70 **2018** - RM 80.00 **நல்லாயன் ஞாயிறு** - RM 1,377.05

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்